22140655

International Baccalaureate®
Baccalauréat International
Bachillerato Internacional

**TAMIL A: LITERATURE – STANDARD LEVEL – PAPER 1**
**TAMOUL A : LITTÉRATURE – NIVEAU MOYEN – ÉPREUVE 1**
**TAMIL A: LITERATURA – NIVEL MEDIO – PRUEBA 1**

Friday 9 May 2014 (morning)
Vendredi 9 mai 2014 (matin)
Viernes 9 de mayo de 2014 (mañana)

1 hour 30 minutes / 1 heure 30 minutes / 1 hora 30 minutos

---

INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this examination paper until instructed to do so.
- Write a guided literary analysis on one passage only. In your answer you must address both of the guiding questions provided.
- The maximum mark for this examination paper is *[20 marks]*.

INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- N'ouvrez pas cette épreuve avant d'y être autorisé(e).
- Rédigez une analyse littéraire dirigée d'un seul des passages. Les deux questions d'orientation fournies doivent être traitées dans votre réponse.
- Le nombre maximum de points pour cette épreuve d'examen est *[20 points]*.

INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra esta prueba hasta que se lo autoricen.
- Escriba un análisis literario guiado sobre un solo pasaje. Debe abordar las dos preguntas de orientación en su respuesta.
- La puntuación máxima para esta prueba de examen es *[20 puntos]*.





© International Baccalaureate Organization 2014

https://xtremepape.rs/

*ஏதாவது **ஒரு** கேள்விக்கு மட்டும் (1 or 2) கீழேயுள்ள கேள்விகளையும் பயன்படுத்தி ஆசிரியரின் நோக்கங்களையும் ஆராய்ந்து விளக்கமாக எழுதவும்.*

**1.**

## நரிக்குறத்தி

திண்டிகோடா மௌனமாக உட்கார்ந்திருந்தான். ஆனால், அவனுடைய மனத்தின் வேக்காட்டை முகம் பிரதிபலித்துக் காட்டிக்கொண்டிருந்தது. சற்று நேரங்கழித்து ஏதையோ நினைத்துக்கொண்டவன் போல் தன் இடுப்பில் தொங்கிய ஒரு மடக்குக் கத்தியை எடுத்து நீக்கித் தனது இடது கை புஜத்தில், பின்னலிட்ட இரட்டைப் பாம்பு போன்ற சித்திரமாகக் குத்திக் கொண்டிருந்த பச்சைக் குறியைச் சதையோடு சீவியெறிந்தான். அது அவனுக்கும் வண்டிகோடிக்கும் கல்யாணம் நடந்த போது குத்திய சடங்குப்பச்சை! அதைச் சீவியெறிந்த இடத்தில் இரத்தம் வழிந்தது. பொடி மண்ணை வாரி அந்தக் குருதிக்காயத்தில் அப்பிக்கொண்டு விருட்டென்று எழுந்துபோய், சிதறிக்கிடந்த சாமான்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு பெரிய கோணிப்பையில் போட்டுக் கட்டுவதில் முனைந்தான்.

அவித்த மரவள்ளிக்கிழங்கைக் கடித்துத் தின்றுகொண்டே அங்கு ஓடி வந்தான் சிறுவன் மயிலங்கோடா. அவனிடம் திண்டிகோடா ஏதோ சொன்னான். பையன் அதைக் கேட்டு முரண்டு செய்வது போல் தலையசைத்தான். பாய்ந்து வந்த திண்டிகோடா அவன் கன்னத்தில் பளீரென ஓர் அறைவிட்டான். துடித்துப் பதறிய பையன் அழுது கொண்டேபோய் கூடாரத்துணியைச் சுற்றிக் கட்டினான்.

அரைமணி நேரத்தில் ‘டேரா’ தூக்கியாகிவிட்டது. திண்டிகோடா ஒரு பையைத் தோளில் மாட்டிக்கொண்டு, கட்கத்தில் வலைப்படலும், கையில் கவுதாரிக் கூண்டுமாகக் கிளம்பினான். பையனும், கிழவியும் மற்ற சாமான்களைத் தூக்கிக்கொண்டு, மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தனர். வியாபார மும்முரத்திலிருந்த பழக்காரன் அவர்களைக் கவனிக்கவில்லை.

சற்று தூரம்சென்ற திண்டிகோடா சட்டென்று நினறு வானத்தை அண்ணாந்து பாத்து “ஏ-ஹே, சங்கிலி கொட்டா!” என்று உரக்கக் கூவிக்கொண்டே ஒரு பிடி மண்ணை வாரிக் காற்றில் வீசிவிட்டுத் தள்ளாடித் தள்ளாடி மேலே நடக்கலானான்.

வழக்கம்போல் அந்த லெவல் கிராஸிங் கதவுகள் சாத்திக் கிடந்தன. சாலையின் இருமுனை திசைகளிலும் வழக்கம்போல ஜனத்திரள் தேங்கிக் கிடந்தது, வாகனாதிகளும் வரிசை கூட்டி நின்று கொண்டிருந்தன. வெறுப்பும் வேதனையுமாக முணுமுணுத்தவாறு சிவப்பு விளக்கின் எதிரில் போய் நின்றான் திண்டிகோடா. அவன் பின்னால் பையனும், கிழவியும் வந்து நின்றனர், பையன் மயிலங்கோடா அங்கு நின்ற கார்களையெல்லாம் ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

எதிரும்புதிருமாக இரண்டு ரயில் வண்டிகள் ஓடி மறைந்தபின், சாத்திக்கிடந்த கதவுகள் திறக்கப்பட்டன. ஜனங்கள் சாடி மோதிக் கொண்டு சாய்ந்து நகர்ந்தனர். கூட்டம் கலையும்வரை தயங்கி நின்ற திண்டிகோடா ஒரு பெருமூச்சு விட்டபடி சாலையில் இறங்கி நடந்தான்.



https://xtremepape.rs/

பின்னால் வந்த சிறுவன் மயிலங்கோடா திடீரென உரத்த குரலில், "ஏ, திண்டிகோடா! இத்ரே, கார்பண்டிலே. வண்டிகோடி போய்ரே, போய்ரே!" என்று கூவிக்கொண்டே, எதிரே மெள்ள வந்து கொண்டிருந்த நீலநிறக் காரைச் சுட்டிக் காட்டினான்.

இதைக் கேட்டு அடங்காச் சினமுற்ற திண்டிகோடா, சடாரென்று குனிந்து, அந்தக் காரினுள் தன் அனல் பார்வையை வீசினான், மறுகணம், தேள் கொட்டியவன் போல் துடித்துப் பின்னால் சரிந்து, கண்களை நிமிண்டிக் கொண்டு பரபரப்புடன் விழித்து நோக்கினான்.

அங்கே, அந்தப் பெரிய காரினுள், ஓர் நரிக்குறத்தி ஒயிலாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். ஆனால், அவள் உண்மையான நரிக்குறத்தி அல்ல: நரிக்குறத்திபோல் 'மேக்-அப்' செய்து கொண்டிருந்த ஒரு சினிமா நட்சத்திர நடிகை அவள்! மத்தியான ஷூட்டிங் முடிந்து, சிற்றுண்டிக்காகத் தன் வீட்டிற்குச் சென்றவள், இப்போது மீண்டும் படப்பிடிப்பிற்காக ஸ்டியோவுக்குப் போகிறாள் போலும்! "டோய்! நளினாதேவி போறாடா, நளினாதேவி!" என்ற குரல்கள் ஜனக் கும்பலிடையே இருந்து எழுந்தன. அடுத்த கணம் அந்தக் கார் குபீரெனக் கிளம்பி, சற்றைக்கெல்லாம் மறைந்தே போய்விட்டது.

பிரமை பிடித்தவன்போல் விக்கித்து நின்றான் திண்டிகோடா.

அதே சமயம், சாலையின் எதிர்த் திசையிலிருந்து, "ஏ,.... பச்சைமணி, பாசிமணி, கருகமணி, ராஜாத்தி மணி வாங்கலியோ ஆயே!" என்று ஓசையாகக் கூவிக்கொண்டே வெயிலில் வாடிச் சோர்ந்து வந்து கொண்டிருந்தாள் நரிக்குறத்தி வண்டிகோடி.

ஜெகசிற்பியன் - நரிக்குறத்தி - உரைநடை

(a) இந்தக் கதைக்குக் குடும்பம் எவ்வளவு முக்கியம் என்பது பற்றி விவரமாக எழுதவும்.

(b) வித்தியாசங்கள் உபமானங்கள் ஆகியவற்றால் ஏற்படும் விளைவுகளை விவரமாக எழுதவும்.



https://xtremepape.rs/

**2.**

**தமிழ்**

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்,
பாமரராய் விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்,
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை,
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்,
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

பாரதியார் - தமிழ் - கவிதை

(a) மக்களின் எண்ணங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் ஆசிரியர் இந்தக் கவிதையில் எப்படி முறையிடுகிறார்?

(b) கவிதை ஆசிரியரின் கருத்துகளைப் புரிந்து கொள்ள உனக்கு இந்த அமைப்பு எப்படி உதவி செய்தது?



https://xtremepape.rs/